Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. CC . No. 57/2023
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS -2

| | | | |
|---|---|---|---|
| Name: | செந்தில்குமார் | Calling: | விவசாயம் |
| Husband's Name: | வெங்கடேசன் | Religion: | |
| Village: | ஆவாரங்குப்பம் | Age: | 43 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 07.03.2026 நேரம் : 01.23 AM

(எதிரிகள் ஆஜர். )

அ.சா.2 முதன்மை விசாரணை.

ஆஜர் எதிரிகளை தெரியும், எனது ஊர்க்காரர்கள். சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முன்பு என் அண்ணன் அ.சா.1 நிலத்தில் வேலை செய்து கொண்டிருந்தபோது எனக்கு சுகர், BP உள்ளதால் மயங்கி கீழே விழுந்துவிட்டார். அந்த தகவலை கேட்டு நானும் மயங்கி விழுந்துவிட்டேன். அதனால் வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். போலிசார் என்னை விசாரித்தனர்.

அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளிற்கு இணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கியதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.

என்னிடம் காட்டப்படும் சமாதான மனுவில் நிகழ்நிலை புகார்தாரர் என்ற இடத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது. அதை தற்போது

எதிரிகளுடன் சமாதானமாக போவதற்கு போட்டுக்கொடுத்தேன் என்றால் சரிதான். (சமாதான மனு ஏற்கனவே அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.)

கடந்த 16.04.2022ம் தேதி மாலை 04.30 மணியளவில் நானும், அ.சா.1ம் ராமநாயக்கன்பேட்டை முனியாங்கொல்லை கூட்ரோட்டிடம் இருந்தபோது எதிரிகள் இருவரும் அங்கு வந்து அ.சா.1ஐயும், என்னையும் அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார்களா என்றால் இல்லை. 1ம் எதிரி கையால் அ.சா.1ஐ அடித்து கீழே தள்ளினாரா என்றால் இல்லை. 2ம் எதிரி கீழே விழுந்து கிடந்த அ.சா.1ன் பிறப்புறுப்பின் மீது காலால் உதைத்தாரா என்றால் இல்லை. சண்டையை விலக்க சென்ற என்னை 1ம் எதிரி கையால் வயிற்றின் மீது குத்தினாரா என்றால் இல்லை. உயிரோடு விடமாட்டேன் என எதிரிகள் இருவரும் மிரட்டினார்களா என்றால் இல்லை. சம்பவத்தில் ஏற்பட்ட காயத்திற்கு நாங்கள் இருவரும் வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோமா என்றால் இல்லை. போலிஸ் விசாரணையில் உண்மை சங்கதிகளை கூறிவிட்டு எதிரிகள் எனது ஊர்காரர்கள் என்பதால் தற்போது எதிரிகளின் வேண்டுகோளுக்கு இணங்க அவர்களுடன் சமாதானமாக செல்வதாலும் எதிரிகளை வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மைக்கு புறம்பான சங்கதிகளை சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் ஆஜர், எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) செந்தில் குமார்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K

Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. CC . No. 57/2023
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS –1

| | | | |
|---|---|---|---|
| Name: | அருளானந்தன் | Calling: | விவசாயம் |
| Husband's Name: | வெங்கடேசன் | Religion: | |
| Village: | ஆவாரங்குப்பம் | Age: | 45 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 07.03.2026 நேரம் : 01.15 AM

(எதிரிகள் ஆஜர். )

அ.சா.1 முதன்மை விசாரணை.

ஆஜர் எதிரிகளை தெரியும், எனது ஊர்க்காரர்கள். சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முன்பு நிலத்தில் வேலை செய்து கொண்டிருந்தபோது எனக்கு சுகர், BP உள்ளதால் மயங்கி கீழே விழுந்துவிட்டேன். மயக்கம் தெளிந்து பார்த்தபோது வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் இருந்தேன். அங்கு போலிசார் வந்து என்னிடம் வெள்ளை தாளில் கையொப்பம் வாங்கினார்கள். எதற்காக என்று தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது. புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளிற்கு இணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கியதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.

என்னிடம் காட்டப்படும் சமாதான மனுவில் நிகழ்நிலை புகார்தாரர் என்ற இடத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது. அதை தற்போது எதிரிகளுடன் சமாதானமாக போவதற்கு போட்டுக்கொடுத்தேன் என்றால் சரிதான். **(சமாதான மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

கடந்த 16.04.2022ம் தேதி மாலை 04.30 மணியளவில் என் தம்பி செந்தில்குமாரும் ராமநாயக்கன்பேட்டை முனியாங்கொல்லை கூட்ரோட்டிடம் இருந்தபோது எதிரிகள் இருவரும் அங்கு வந்து எங்கள் இருவரையும் அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார்களா என்றால் இல்லை. 1ம் எதிரி கையால் என்னை அடித்து கீழே தள்ளினாரா என்றால் இல்லை. 2ம் எதிரி கீழே விழுந்து கிடந்த என்னை எனது பிறப்புறுப்பின் மீது காலால் உதைத்தாரா என்றால் இல்லை. சண்டையை விலக்க வந்த என் தம்பியை 1ம் எதிரி கையால் வயிற்றின் மீது குத்தினாரா என்றால் இல்லை. உயிரோடு விடமாட்டேன் என எதிரிகள் இருவரும் மிரட்டினார்களா என்றால் இல்லை. சம்பவத்தில் ஏற்பட்ட காயத்திற்கு நாங்கள் இருவரும் வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோமா என்றால் இல்லை. போலிஸ் விசாரணையில் உண்மை சங்கதிகளை கூறிவிட்டு எதிரிகள் எனது ஊர்காரர்கள்ள் என்பதால் தற்போது எதிரிகளின் வேண்டுகோளுக்கு இணங்க அவர்களுடன் சமாதானமாக செல்வதாலும் எதிரிகளை வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மைக்கு புறம்பான சங்கதிகளை சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் ஆஜர், எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) அருளானந்தன்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K